**Date: 02-08-2021**

**DVA** 532/2019

ம.சா. 2 கவிதா

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்வதற்காக மனுதாரர் தரப்பில் இருந்து சம்மன் எதுவும் வந்ததா என்றால் இல்லை. நான் கவிதா என்பதற்கு ஆதாரமாக ஆதார் அட்டை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2006 முதல் 2011 வரை நான் பணிபுரிந்த டெல் கால் சென்டர் எங்கு உள்ளது என்றால் கே .ஜி கேம்பசில் உள்ளது. நானும் மனுதாரரும் அந்த நிறுவனத்தில் ஒன்றாகப் பணிபுரிந்து வந்ததற்கான ஆதாரங்களைத் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை . என்னிடம் உள்ளது. தாக்கல் செய்யத் தயாராக உள்ளேன் . நானும் மனுதாரரும் மாத சம்பளம் ரூ. 13,000/- பெற்று வருவதற்கான ஆதாரங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2012 ல் எந்த தேதியில் எந்த மாதத்தில் மனுதாரர் தன்னுடைய வேலையை இராஜினாமா செய்தார் என்றால் நினைவில் இல்லை . மனுதாரர் அந்த நிறுவனத்திலேயே வேலை செய்யவில்லை என்றாலும் , நான் வழக்கிற்காகப் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்த சீட்டு கம்பெனியில் நானும் மனுதாரரும் சீட்டு போட்டோம் என்றால் தர்ஷன் சிட் பண்ட்ஸ் என்ற ஒரு மெடிக்கல் ஷாப்பில் உள்ள சீட்டு கம்பெனி. நான் சொல்லி தான் மனுதாரர் அதில் சீட்டு போட்டார் . அந்த சீட்டு கம்பெனி பதிவு செய்யப்பட்ட ஒன்றா என்றால் இல்லை . அதன் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் சரவணம்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு அருகில் உள்ளது . அதற்கான தனியாக அலுவலகம் இல்லை. ஒரு வீட்டில் தான் உள்ளது . எந்த கால கட்டத்தில் சீட்டுகள் போட்டோம் என்றால் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு இருந்தே போட்டோம். எவ்வளவு கால கட்டத்திற்கு சீட்டு போட்டோம் என்றால் வேலைக்கு சேர்ந்து

6 மாதத்தில் இருந்து போட்டோம் . ஒரு சீட்டின் கால அளவு 10 மாதங்கள். 3 முறை போட்டோம். சீட்டு கட்டிய அட்டைய நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாக்கல் செய்ய முடியுமா என்றால் நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் முடியாது . எவ்வளவு ரூபாய்க்கு சீட்டு போட்டோம் என்றால் முதலில் ரூ. 25,000/-ற்கும், அதன் பின் ரூ. 50,000/-ற்கும் போட்டோம். அதன் பின் ரூ . 1,00,000/- சீட்டு போட்டோம். 4ம் முறையாக சீட்டு போட்ட போது மனுதாரரால் கட்ட முடிய வில்லை என்று கூறி பாதியிலேயே பணத்தை திரும்ப பெற்று விட்டார். நான் சொன்னவாறு சீட்டு கம்பெனியே இல்லை என்றாலும், நானும் மனுதாரரும் அதில் சீட்டு கட்டவேயில்லை என்றாலும் , வழக்கிற்காகப் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்த நகைக்கடையில், எந்த தேதியில், எவ்வளவு நகைகள், எந்த டிசைனில், எவ்வளவு எடையில் நானும் மனுதாரரும் நகைகள் வாங்கினோம் என்றால் டவுன்ஹாலில் உள்ள மகாலட்சுமி ஜுவல்லரியில் 7 ½ பவுனிற்கு மனுதாரர் ஒரு ஆரமும் , 2 பவுனில் ஒரு செயினும் , 1 ¼ பவுனில் சிறிய செயினும், டவுன்ஹாலில் உள்ள நகை செய்யும் பட்டரையில் இருந்து கம்மல் மற்றும் மோதிரமும், அவ்வப்போது சிறு சிறு நகையும் சீட்டு எடுத்த பணத்தில் எடுத்தார். மேற்படி நகைகளுக்குண்டான இரசீதினை தங்களால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னிடம் இரசீதுகள் இல்லை. மனுதாரரிடம் தற்போது உள்ளதா என்றும் எனக்கு தெரியாது . மேற்கூறியவாறு நகைகள் எதுவும் வாங்கவில்லை என்றாலும் , நான் மனுதாரருக்காகப் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . மனுதாரர் திருமணமான போது எந்த வீட்டில் குடியிருந்தார் டாடாபாடில் உள்ள வீட்டில் குடியிருந்தார் . விலாசம் தெரியுமா என்றால் விலாசம் தெரியாது. ஆனால் அடையாளம் தெரியும். அது சொந்த வீடா என்றால் அது அவரது பாட்டியின் சொந்த வீடு . மனுதாரரின் பாட்டிக்கு சொந்த வீடு கிடையாது என்றாலும், நான் வழக்கிற்காகப் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . மனுதாரரின் தகப்பனார் எனன வேலை செய்து கொண்டிருந்தால் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . மனுதாரரின் தாயார் எங்கு வேலை செய்தார் என்றால் தெரியாது .

மனுதாரரின் திருமணத்திற்கு முன்பே அவரின் தங்கைக்கு திருமணமாகி விட்டது என்றால் ஆமாம். அவரது தங்கையின் பெயர் என்ன என்றால் சரியாக நினைவில் இல்லை. அவரது தங்கையின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியமா . அவரது தங்கைக்கு எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தெரியாது . அவருக்கு தம்பி இருக்கிறார் என்றால் ஆமாம். அவரின் பெயர் என்ன என்றால் தெரியாது . அவர் எங்கு பணி புரிகிறார் என்ற விபரம் தெரியாது என்றால் ஆமாம். மனுதாரரின் திருமண சமயத்தில் அவர் எங்கு வேலை பார்த்தார் என்றால் ஒரு கொரியர் நிறுவனத்தில் அதன் பெயர் **THL** . அப்போது அவரின் மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ . 12,000/- வாங்கினார். மனுதாரர் அவ்வளவு சம்பளம் வாங்க வில்லை என்றாலும் , நான் வழக்கிற்காகப் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த கொரியர் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் தெரியாது . அவ்வலுவலகத்திற்கு நான் சென்றதில்லை . கோணியம்மன் கோவிலில் நான் 1ம் எதிர்மனுதாரரை எந்த தேதியில் சந்தித்தேன் என்றால் ஜுலை 2015. அப்போது போட்டோ வீடியோ எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. நான் எந்த நேரத்தில் கலந்து கொண்டேன் என்றால் விழா நடந்து கொண்டிருந்த போது பாதியில் கலந்து கொண்டேன். எத்தனை பேர் விழாவில் கலந்து கொண்டார்கள் என்றால் சுமார் 30 நபர்கள் கலந்து கொண்டிருப்பாகர்கள். அச்சமயத்தில் நான் எதிர்மதாரர்களை சந்திக்கவேயில்லை என்றாலும், அவர்களுடன் பேசவில்லை என்றாலும் சரியல்ல . பார்த்தேன் ஆனால் பேசவில்லை. 1ம் எதிர்மனுதாரருடன் நான் பேசவும் இல்லை . மனுதாரரும் எனக்கு அறிமுகமும் செய்து வைக்கவில்லை என்றால் ஆமாம் . ஆகஸ்டு 2015ல் மனுதாரர் என்னிடம் எதிர்மனுதாரர்கள் வரதரட்சணை கேட்பதாக கூறினாரா என்றால் ஆமாம் . மாப்பிள்ளை வீட்டார்களை பற்றி என்ன சொன்னார் என்றால் நல்ல இடம், டில்லியில் நல்ல இடத்தில் வேலை பார்க்கிறார் என்று சொன்னார். மனுதாரர் அவ்வாறு வரதட்சணை குறித்து என்னிடம் எதுவும் பேசவில்லை என்றாலும் , நான் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரரின் வீட்டை விற்று கிடைத்த பணத்தில் தான்

திருமண செலவு செய்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் அஞ்சாமயிலிஸ் என்ற ஊரில் உள்ள தங்களது வீட்டை விற்று தான் திருமண செலவு செய்ததாக மனுதாரர் என்னிடம் கூறினார். அவ்வீடு யாருக்கு எப்போது விற்கப்பட்டது என்றால் தெரியாது . மனுதாரரின் குடும்பத்திற்கு சொந்தமாக வீடே இல்லை என்றாலும் , அதை அவர்கள் விற்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காகப் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு ரூ. 7,50,000/- த்தை யாரிடம் கடனாகப் பெற்றார் என்றால் வீட்டை விற்ற பணமும், சீட்டு போட்டு எடுத்த பணமும், சிறிது கடனும் பெற்று திருமண செலவு செய்தார். ஆனால் எவ்வளவு தொகை கடனாகப் பெற்றார் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் ரூ. 7,50,000/- மனுதாரர் கடனாகப் பெற்று எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்ததாக நான் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு திருமண முகூர்த்தம் எங்கு நடந்தது என்றால் ஈரோட்டில் நடந்தது . எதில் நான் திருமணத்திற்கு சென்றேன் என்றால் மனுதாரருடன் சென்றேன் . ஈரோட்டில் எங்கு திருமணம் நடந்தது என்றால் மாப்பிள்ளை வீட்டின் குல தெய்வமான குலவிளக்கம்மன் கோவிலில் நடைபெற்றது. திருமணத்தில் எத்தனை பேர் கலந்து கொண்டனர் என்றால் 100 பேர். திருமண விருந்து, செலவு மற்றும் போக்குவரத்து செலவுகள் யார் செய்தார்கள் என்றால் எனக்கு நேரடியாகத் தெரியாது . பாதி பாதி போட்டுக் கொண்டதாக மனுதாரர் என்னிடம் சொன்னார். புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அதில் நான் உள்ளேனா என்றால் தெரியாது . திருமண வரவேற்பு எங்கு நடந்தது என்றால் கோவை குனியமுத்தூரில் உள்ள ஆயிஷா மஹாலில் நடந்தது. வாடகை எவ்வளவு என்றால் தெரியாது . யார் புக் செய்தார்கள் என்றால் தெரியாது . வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள் என்றால் 500 பேர் கலந்து கொண்டார்கள். திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டேனா என்றால் ஆமாம் . புகைப்படங்கள் வீடியோ எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அதில் நான் உள்ளேனா என்றால் நான் மேடைக்கு சென்றேன். ஆனால் புகைப்படத்திற்கு நிற்க வில்லை . வீடியோவில் நான்

உள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தின் 3ம் பத்தியில் நான் சொல்லியுள்ளவாறு மனுதாரரின் பெற்றோர்கள் திருமண நிகழ்ச்சிக்கு முன்னால் ரூ. 7,50,000/- தொகை மற்றும் 25 பவுன் தங்க நகைகளை எதிர்மனுதாரர்களிடம் கொடுத்த போது நான் அவர்களின் அருகில் இருந்ததாக கூறியிருக்கும் சங்கதி பொய் என்றால் சரியல்ல . மனுதாரர் அந்த நகைகளை போட்டிருந்தார் . பணத்தை தட்டில் வைத்து எதிர்மனுதாரர்களிடம் கொடுத்தார்கள். எவ்வளவு பணம் அந்த தட்டில் இருந்தது என்றால் நான் எண்ணி பார்க்க வில்லை . மனுதாரர் தான் அதில் ரூ . 7,50,000/- இருந்ததாக சொன்னார். அந்த பணத்தில் எத்தனை கட்டுகள் எந்த ரூபாய் நோட்டுகள் இருந்தது என்றால் தெரியாது. நான் மணமேடைக்கு கீழ் அமர்ந்திருந்ததால் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. ரூ.7,50,000/- பணமோ, நகையோ மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு கொடுக்கவேயில்லை என்றாலும் , நான் வழக்கிற்காகப் பொய்யாகச் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தின் 3ம் பத்தியில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருடன் பேசும் போது எதிர்மனுதாரர் குடிபோதையில் இருந்ததைக்கண்டு அதிர்ச்சியுற்றதாக நான் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல . அதன் காரணமாகத்தான் நான் புகைப்படத்தில் நிற்கவில்லை . மேடை ஏறியவுடன் 1ம் எதிர்மனுதாரர் குடிபோதையில் இருந்ததாக எனக்கு லேசான வாடை வந்ததால் தான் நான் போட்டோவுக்கு நிற்காமல் உடனடியாக மேடையயை விட்டு இறங்கி விட்டேன் . நான் திருமணத்திற்கோ, திருமண வரவேற்பிலோ கலந்து கொள்ளவில்லை என்றாலும் , மனுதாரர் கேட்டு கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல . என் பிரமாண வாக்குமூலத்தின் 4ம் பத்தியில் மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் மூர்க்கதனமாக தாக்கியதாகவும், கோவை சிட்டி டவர் ஹோட்டலில் குடித்து விட்டு தாக்கியதாகவும் கூறி காலில் ஏற்பட்ட காயத்தை மனுதாரர் என்னிடம் காட்டியதாக நான் கூறியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல . நான் அந்த பத்தியில் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் , நான் வழக்கிற்காகப் பொய்யாக

சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவர் சிகிச்சை எடுத்தாரா என்றால் டாக்டரிடம் சென்றதாக கூறினார் . எந்த டாக்டரிடம் எந்த தேதியில சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . மனுதாரரின் பிறந்த நாள் எப்போது என்றால் தெரியாது . எனக்கும் மனுதாரருக்கும் 16 வருடங்கள் நட்பு இருப்பதாக கூறியிருப்பதே பொய் என்றால் சரியல்ல . எனக்கும் மனுதாரருக்கும் தற்போது தான் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது என்றாலும , அதைக்கொண்டு மனுதாரரின் திருமணத்திற்கும் வரவேற்புக்கு நான் சென்றிருந்ததாகவும் , சீட்டு நடத்தியதாகவும் , நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . மனுதாரர் கேட்டுக் கொண்டதற்காக மனுதாரர் சொல்லி கொடுத்த படி நான் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . மனுதாரரின் திருமணத்திற்கு முன்னரும் பின்னரும் அவர்களின் திருமண வாழ்க்கையில் நடந்த விசயங்கள் எதுவும் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றாலும், நான் வழக்கிற்காகப் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . நானும் மனுதாரரும் ஒன்றாக வேலை செய்யவில்லை என்றாலும் , மனுதாரருக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் வழக்கிற்காகப் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.